உண்மை செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
அன்னை பூமி ஆன்லைன் தொலைக்காட்சி

# மாலை யுகம்

Maalai Yugam Daily e-Paper https/www.myvtdaily.com நாளிதழ்

Sun raise has many News Papers in English, but Sun sets should end with a News Paper
VIRTUAL TIMES
ENGLISH EVENING DAILY
RNI No.TNTAM/2016/73487

மலர் - 10 | இதழ் - 01 | சென்னை | திங்கட்கிழமை | 24.03.2025 | விலை.4- | பக்கம் - 4
Vol-10 | Issue - 01 | Chennai | Monday | 24.03.2025 | Price.4- | page -4


## “மேகதாதுவில் எந்த கொம்பனாலும் அணை கட்ட முடியாது” சட்டப் பேரவையில் அமைச்சர் துரைமுருகன் பேச்சு

சென்னை, மார்ச்24

:மேகதாதுவில் எந்த கொம்பனாலும் அணை கட்ட முடியாது என அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார். சட்டப்பேரவையில் நீர்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய அமைச்சர் துரைமுருகன்; காவிரி விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றம் வரையிலும் சென்றிருக்கிறோம். பிரச்னையை நீங்களே பேசி தீர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்கள். இதுதொடர்பாக அதிமுக ஆட்சியில் இருக்கும் பொழுதும் பேசிக்கொண்டு தான் இருந்தீர்கள். நாங்கள் ஆட்சியில் இருக்கும் போது



பேசிக்கொண்டு தான் இருக்கிறோம். தமிழக அரசின் அனுமதி இல்லாமல் எந்த கொம்பனாலும் மேகதாது அணையை கட்ட முடியாது என்று கூறினார்.


கனிமவளங்கள் கொள்ளையா? ரூ துரைமுருகன் விளக்கம்

அண்டை மாநிலங்களுக்கு கனிம வளங்களை எடுத்துச் செல்லக்கூடாது என்று நீதிமன்றம் சொல்லவில்லை; சட்டத்திற்கு புறம்பாக அண்டை மாநிலங்களுக்கு கனிம வளங்களை எடுத்துச் செல்லவில்லை. கனிம வளங்கள் கொள்ளை போகிறது என இனிமேல் யாரும் சொல்ல முடியாது; சிறிய கல் கூட நம்முடைய அனுமதி இல்லாமல் எடுத்துச் செல்ல முடியாது. இதுவரை 21 ஆயிரம் வாகனங்கள் பிடிக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

## தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக நடந்த கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம்

சென்னை, மார்ச்24

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக நடந்த கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்துள்ளார். மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பை 25 ஆண்டு ஒத்திவைக்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். தொகுதி மறுவரையறை தொடர்பான கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டம் தொடர்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.



தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளுடனும் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக கடந்த 5ம் தேதி ஆலோசித்தோம். மக்கள் நல்வாழ்வு திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காகத் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்காகச் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்போது இருக்கும் தொகுதி மறுவரையறை மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் எனப் பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும். வட மாநிலங்களில் எந்த விகிதத்தில் மறுசீரமைக்கப்படுகிறதோ அதே விகிதத்தில் தமிழ்நாட்டிலும் உயர்த்த வேண்டும்.

தொகுதி மறுசீரமைப்பால் தமிழ்நாடு பாதிக்கப்படாது என்று பிரதமர் உறுதியளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம். அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்கள் தண்டிக்கப்படக்கூடாது. தற்போதைய நாடாளுமன்ற கூட்டத்தொடரிலேயே கூட்டு நடவடிக்கை குழு சார்பில் பிரதமரிடம் மனு அளிக்க முடிவு செய்துள்ளோம். அதிமுக உள்ளிட்ட அனைத்து கட்சிகளுக்கும் மக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முன்னெடுத்துள்ள தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்கள் தண்டிக்கப்படக்கூடாது. நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளின் தமிழ்நாட்டு எம்.பி.க்கள் குழு பிரதமரை சந்திப்பர். மாநிலங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஒன்றிய அரசுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவே கூட்டுக் குழு கூட்டம் உள்ளது என்று முதலமைச்சர் விளக்கம் அளித்துள்ளார்.

## மஸ்ஜித் நூர் பள்ளிவாசல் மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறப்பு நிகழ்வு

சென்னை, மார்ச்24

:சென்னை தண்டையார்பேட்டை எழில் நகர் மஜீத்நூர் பள்ளிவாசல் சார்பாக சமத்துவ இப்தார் நோன்பு திறப்பு நிகழ்வு நடைபெற்றது... இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக எழில் நகர் சுற்று வட்டார அனைத்து வியாபாரிகள் சங்க தலைவர் ஈஸ்வர பாலன் தலைமையில் வியாபாரி சங்க நிர்வாகிகள் பொருளாளர்கள்... பி6 காவல் நிலைய அதிகாரி மற்றும் தலைவர் பி சாகுல் ஹமீது துணைத் தலைவர் ராஜா முஹம்மது செயலாளர் தமீம் அன்சாரி இணை செயலாளர்



சலாவுதீன் பொருளாளர் அப்துல் மஜீத் துணைப் பொருளாளர் முகமது அனீஸ் கமிட்டி தலைவர் தலைவர் சையத் மதர் கமிட்டி ஒருங்கிணைப்பாளர் ஜே சதுல்லா ஆகியோர் கலந்து கொண்டு... இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சமத்துவ இப்தார் நோன்பு திறப்பில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## இந்திய அரசின் ஜவுளி அமைச்சகம் மற்றும் தேசிய வடிவமைப்பு மையத்தின் நெசவு கண்காட்சி சென்னையில் நாளை துவங்குகிறது

சென்னை, 24 மார்ச் 2025:

இந்திய அரசின் ஜவுளி அமைச்சகம் மற்றும் தேசிய வடிவமைப்பு மையத்தின் நெசவு கண்காட்சி சென்னையில் நாளை துவங்குகிறது.

தேசிய வடிவமைப்பு மையம், மற்றும் இந்திய அரசின் ஜவுளி அமைச்சகம், இணைந்து, ‘பாரம்பரிய நெசவு சிறப்பு கண்காட்சி’ எனும் நிகழ்வை சென்னையில் நடத்த உள்ளது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தலைசிறந்த நெசவாளர்களின் தனித்துவமான கைவினை திறமைகளை வெளிப்படுத்தும் இந்த கண்காட்சி, மார்ச் 25 முதல் 31 வரை, கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள ஆர்.கே. மாநாட்டு மையத்தில் நடைபெற உள்ளது.

ஒருவார காலம் நடைபெறும்




இந்த கண்காட்சி, 75 தலைசிறந்த நெசவாளர்கள், சுய உதவி குழுக்கள், மற்றும் கூட்டுறவு சங்கங்களை இணைத்துக் கொண்டு பாரம்பரிய கைத்தறி பொருட்களின் பல்வகை தன்மைகளை வெளிக்கொணர உள்ளது. பார்வையாளர்கள் பட்டு மற்றும் பருத்தி சேலைகள், ஆடைப்பொருட்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள், சால்வைகள், மற்றும் இந்திய பாரம்பரிய நெசவின் அழகை பிரதிபலிக்கும் பிற கைத்தறி பொருட்களை காட்சிப்படுத்தப்படவுள்ளது.

‘பாரம்பரிய நெசவின் சிறப்பு கண்காட்சி’ மூலம் நெசவாளர்களுக்கும் வணிகர்களுக்கும் நேரடி சந்தை தொடர்பு ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகிறது. இதன்மூலம் கைத்தறி பொருட்களை விற்பனை செய்ய விரும்பும் ஏற்றுமதியாளர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுடன் நெசவாளர்களை இணைக்கும் வாய்ப்பு கிடைக்கும். மேலும், பாரம்பரிய நெசவுத் தொழில் முறைகளைப் பாதுகாத்து, புதிய உற்பத்தி முறைகளுக்கு உந்துதல் அளிக்க, வடிவமைப்பாளர்களுக்கும் தொழில் வல்லுநர்களுக்கும் நல்ல தளமாக அமையும்.

இந்தக் கண்காட்சியின் முதன்மை நோக்கம், கைத்தறி நெசவாளர்களுக்கு சந்தை அணுகலை வழங்கி, பாரம்பரிய தொழிற்திறமையைப் பாதுகாத்து, அவர்களுக்கு நிலைத்துவமான வருமானத்தை உருவாக்குவதே ஆகும். இக்கண்காட்சி நெசவாளர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கான அரசின் நோக்கத்துடன் இசைந்தும், இந்தியாவின் கைத்தறி பாரம்பரியத்திற்கு உலகளவில் அங்கீகாரம் பெறவும் உதவுகிறது.

இந்த நிகழ்வு ஏராளமான பார்வையாளர்கள், வாங்குபவர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் கைத்தறி ஆர்வலர்களை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



சேலம் மாவட்டம். கொங்கு வேளாளக் கவுண்டர்கள் சங்கம் சார்பாக, சங்ககிரி நினைவுத்தூன் முன்பு, சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரர் தீரன் சின்னமலை அவர்கள் தூக்கிலிடப்பட்ட சங்ககிரியில் அவர்களுக்கு திருவுருவ சிலை அமைக்க மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் கையெழுத்து இயக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கொங்கு வேளாளர் கவுண்டர்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கொங்கு சி.சுகுமார், கொங்கு ஜெயபால் மற்றும் 600க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவொற்றியூர் பகுதியில் உள்ள இஸ்லாமியர்கள் கபரஸ்தான் நிர்வாகம் இப்தார் நிகழ்ச்சி தொழுகை திடலில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக கபரஸ்தான் காப்பாளரும் முன்னாள் எம்பி ஜே.எம்.ஹாரூன், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மாவட்ட இளைஞர் அணி திமுக இம்ரான்கான் திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் ரஜினிஸ் திமுக மாவட்ட அவை தலைவர் குறிஞ்சி கணேசன், திமுக மாவட்ட பிரதிநிதி ரஜினி நந்தி, டி.கே.பி. குரூப் ஆசைத்தம்பி, வியாபாரிகள் சங்க தலைவர் தயாளன் மற்றும் கபர்ஸ்தான் நிர்வாக உறுப்பினர்கள் இஸ்லாமிய ஆண்களும் பெண்களும் பெரும் திரளாக இப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நோன்பு திறந்தனர்.

மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
வந்தவாசி – திருவண்ணாமலை மாவட்டம்.

**O.S.No.0000048/2024**
**in**
**I.A.No.2/2025**

திரு.**A.**தண்டபாணி
த/பெ. அனந்தசயனம்
நெ.7/232, A டைப், 55–வது தெரு,
சிட்கோ நகர், வில்லிவாக்கம்,
சென்னை – 600 049.
மற்றும் பலர் –மனுதாரர்கள் / வாதிகள்

எதிர்

திருமதி.தமயந்தி மற்றும் பலர்,
–எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

பெறுநர்:
D7 பாபு த/பெ. ராஜகோபால்,
D8 அந்தோணி த/பெ. ராஜகோபால்,
இருவரின் வசிப்பிடம்: நெ.19–23,
வார்டு எண் : 35, ஒட்டுபுரை தெரு,
கன்னியாகுமரி நகரம் & வட்டம்,
கன்னியாகுமரி மாவட்டம்–629001.

அறிவிப்பு

மேற்படி வழக்கில் வாதியானவர் பிரதிவாதியாகிய தங்களின் மீது வந்தவாசி வட்டம், பிருதூர் கிராமத்தில் அடங்கிய அசையா சொத்தின் பெயரில் கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் **O.S.No. 0000048/2024 in I.A.No.2/2025** எண்ணாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கில் வாதிகளின் சார்பாக வழக்கறிஞர் மற்றும் நீதிமன்றம் வாயிலாக பலமுறை அழைப்பாணை சார்வு செய்தும், பிரதிவாதியாகிய தாங்கள் வராத காரணத்தினால் மேற்படி வழக்கானது தங்களின் வருகைக்காக **21.04.2025** அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. ஆதலால் பிரதிவாதியாகிய D7 & D8 ஆகிய இருவரும் **21.04.2025** அன்று காலை **10.30** மணிக்கு கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்களோ அல்லது தங்கள் உத்தரவு பெற்ற வழக்கறிஞர் மூலமோ ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் வாதிகளின் மனு ஒருதலை பட்சமாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை அறியவும்.

இப்படிக்கு,
மனுதாரரின் வழக்கறிஞர்
திரு.N.சண்முகசுந்தரம்,M.A., M.L.,
வந்தவாசி.

## சக்ஷம் கன்னியாகுமரி மாவட்ட நாகர்கோவில் மாநகர மாதாந்திர மற்றும் மகளிர் தின சிறப்புக் கூட்டம்

நாகர்கோவில் மார்ச்.24–

சக்ஷம் கன்னியாகுமரி மாவட்ட நாகர்கோவில் மாநகர மாதாந்திர மற்றும் மகளிர் தின சிறப்புக் கூட்டம், மார்ச் 23 அன்று அக்ஷய கண்ணன் அலுவலகம். ஒழுகினசேரியில் வைத்து நடைபெற்றது.

சக்ஷம் நாகர்கோவில் மாநகர தலைவர் சுந்தர் ராஜன் தலைமை தாங்கினார். மகளிர் பொறுப்பாளர் விஜயலெக்ஷ்மி தலைமையில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் இறைவணக்கம் பாட, துணைத் தலைவர் பாலகிருஷ்ணன் நாயர் வரவேற்றார். மாநகர செயலாளர் கணபதி அறிக்கை வாசித்தார். மாவட்ட செயலாளர் மணி அரசு நலத் திட்டங்களை எடுத்துரைத்தார். மாவட்ட இணைச் செயலாளர்







ரமேஷ்குமார், நாகர்கோவில் மாநகர பொறுப்பாளர் பொன்னு நீலவடிவு, பாரத ஸ்டேட் வங்கி உதவி மேலாளர் பாபு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நாகர்கோவில் மாநகர மாமன்ற உறுப்பினர் அக்ஷய கண்ணன், அவர்களது சொந்த நிதியில் மாற்றுத்திறனுடைய பெண்ணிற்கு ரூ. 7500/ மதிப்பிலான காலிபர் வழங்கினார்கள்.

டாக்டர்.பி.ராஜராஜன் கலந்துகொண்டு மகளிர் தினத்தில் மாற்றுத்திறனுடைய மகளிர் பங்கு குறித்து உரையாற்றினார்.

மகளிர் பொறுப்பாளர் லதா தேநீர் மற்றும் இனிப்பு வளங்கினார். ஸ்ரீமதி, ராஜேஸ்வரி அனைவருக்கும் பரிசு வழங்கினார்.

துணைத் தலைவர் நாகராஜன் நன்றி தெரிவித்தார்.

# தூத்துக்குடியில் பொதுமக்களுக்கு இரண்டாம் கட்டமாக 131 பேருக்கு கணினி பட்டா அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்



தூத்துக்குடி மார் 24

தூத்துக்குடியில் பொதுமக்களுக்குஇரண்டாம் கட்டமாக 131 பேருக்கு கணினி பட்டா அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்.

தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் இரண்டாம் கட்டமாக 131 பேருக்கு கணினி பட்டாக்களை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார். தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் டூவிபுரத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் தலைமையில் மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு இரண்டாம் கட்ட கணினி பட்டாக்களை வழங்கினார்கள். இந்த விழாவில் அமைச்சர் 131பேருக்கு பட்டா வழங்கி பேசுகையில், மாப்பிள்ளையூரணி உள்பட அரசின் பயன்பாடுகள் இல்லா அனைத்து புறம்போக்கு நிலங்களுக்கு விரைவில் பட்டா வழங்கப்படும் என தெரிவித்தார். இந்த நிகழ்வில் வருவாய் கோட்டாட்சியர் தூத்துக்குடி பிரபு, உதவி இயக்குனர் நில அளவை சீனிவாசன், வருவாய் வட்டாட்சியர் தூத்துக்குடி முரளிதரன் துணை வட்டாட்சியர் முருகன் மற்றும் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதிச்செயலாளர் ரவீந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் ஜெயசீலி, தெய்வேந்திரன், செந்தில்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமிநாதன், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் அருண்குமார், அல்பர்ட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனியில் 3வது புத்தக திருவிழா ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் பெரியசாமி - மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்



தேனி,மார்ச்.24

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட மேனகா மில் மைதானத்தில் மாவட்ட நிர்வாகம், மற்றும் பொது நூலக இயக்ககம் இணைந்து நடத்தும் 3ஆவது புத்தகத் திருவிழாவினை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் மற்றும் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் முன்னிலையில் தொடங்கி வைத்து, புத்தகத்திருவிழாவில் அமைக்கப்பட்டுள்ள புத்தக அரங்குகளை பார்வையிட்டனர்;. புத்தகம் வாசிப்பை மக்கள் இயக்கமாக எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகவும், அந்த காலம் முதல் இந்த காலம் வரை உள்ள பல்வேறு வகையான நூல்களை ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து, பொதுமக்களுக்கு எளிதில் கிடைப்பதற்காகவும் மாவட்டந்தோறும் புத்தகத் திருவிழா நடத்தப்படுகிறது. அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் 3ஆவது புத்தகத் திருவிழா (23.03.2025) முதல் 30.03.2025 வரை 8 நாட்கள் நடைபெறவுள்ளது. இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் மகாலட்சுமி, திட்ட இயக்குநர்கள் அபிதா ஹனீப் (ஊரக வளர்ச்சி முகமை), சந்திரா (மகளிர் திட்டம்), உதவி காவல் கண்காணிப்பாளர் கேல்கர் சுப்ரமணிய பாலசந்ரா முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லெட்சுமணன், பழனிசெட்டிபட்டி பேரூராட்சித் தலைவர் மிதுன்சக்கரவர்த்தி, நகர்மன்றத்தலைவர்கள் ரேணுபிரியா பாலமுருகன் (தேனி அல்லிநகரம்), சுமிதா சிவக்குமார் (பெரியகுளம்), ராஜராஜேஸ்வரி சங்கர் (போடிநாயக்கனூர்), அய்யம்மாள் ராமு (சின்னமனூர்), பழனிசெட்டிபட்டி பேரூராட்சி துணைத்தலைவர் மணிமாறன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) கலைச்செல்வி, துணை இயக்குநர் (தோட்டக்கலை) நிர்மலா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நல்லதம்பி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துமாதவன், மாவட்ட நூலக அலுவலர் சரவணக்குமார், தாட்கோ மேலாளர் சரளா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ராஜராஜேஸ்வரி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வி சந்தியா, உதவி இயக்குநர் (தமிழ்வளர்ச்சித்துறை) இளங்கோ, துணை ஆட்சியர் (பயிற்சி) அரவிந்த், அனைத்து பேரூராட்சித் தலைவர்கள், நகராட்சி ஆணையாளர்கள், செயல் அலுவலர்கள், அனைத்துத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

# கே.ஆர்.கலை மற்றும் அறிவியல் கல்லூரி உயிர்வேதியியல் துறையின் சார்பாக மாநில அளவிலான பயிற்சி பட்டறை




கோவில்பட்டி, மார்ச்24:

உயிர்வேதியியல் துறையின் சார்பாக மாநில அளவிலான பயிற்சி பட்டறை கே.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உயிர்வேதியியல் துறையின் சார்பாக மாநில அளவிலான பயிற்சி பட்டறை நடைபெற்றது. இதில் இத்துறையின் முன்னாள் மாணவரும், க்ளாசிக் கேபயாலஜிக்கல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனருமான முனைவர் காசிவிஸ்வநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். "உயிர் அறிவியல் துறை சார்ந்த மாணவர்கள் எதிர்காலத்தில் சுயதொழில் முனைவதற்கான துறைசார் வாய்ப்புகள் பற்றியும், அதன் தேவைகள், பயன்கள் பற்றிய விளக்கங்களை தெளிவாக மாணவ மாணவியர்களுக்கு சிறப்புரையில் எடுத்து கூறினார்.

இப்பயிற்சி பட்டறையில் பிற கல்லூரிகளை சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்று பயன்பெற்றனர். இப்பயிற்சி பட்டறைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கல்லூரி நிர்வாகத்தினர் வழிகாட்டுதலின் படி முதல்வர், பேராசிரியர்கள், மற்றும் மாணவ, மாணவியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஸ்டார்வுட் பிரீமியர் லீக் என்ற மாபெரும் விளையாட்டு நிகழ்வுக்கு தயாராகும் நவீன்'ஸ் ஸ்டார்வுட் டவர்ஸ்




சென்னை, மார்ச் 24, 2025: சென்னை மாநகரின் மேடவாக்கம் பகுதியில் அமைந்துள்ள ஒரு பிரீமியம் குடியிருப்பு வளாகமான நவீன்'ஸ் ஸ்டார்வுட் டவர்ஸ், இச்சமூகத்தின் விளையாட்டு ஆர்வலர்களது விருப்பத்தையும், ஆர்வத்தையும் பூர்த்தி செய்யும் நோக்கத்தோடு ஸ்டார் பிரீமியர் லீக் என்ற பெயரில் ஒரு மாபெரும் விளையாட்டு நிகழ்வை இந்த ஆண்டும் நடத்தவிருக்கிறது. நவீன்'ஸ் ஸ்டார்வுட் டவர்ஸ் குடியிருப்பாளர்களின் விளையாட்டு ஆர்வலர்களது ஒரு அமைப்பான ஸ்டார்வுட் ஸ்போர்ட்ஸ் கிளப் ஏற்பாடு செய்து நடத்தும் இந்நிகழ்வில் 120க்கும் அதிகமான குடியிருப்பாளர்கள் பங்கேற்கின்றனர். சென்னை மாநகரில் பெரிதும் மதிக்கப்படுகிற, அதிக நம்பிக்கைக்குரிய ரியல் எஸ்டேட் டெவலப்பர் ஆன நவீன்'ஸ், இந்த விளையாட்டு நிகழ்வின் டைட்டில் ஸ்பான்சராக பங்கேற்கிறது.

ஸ்டார்வுட் பிரீமியர் லீக் நிகழ்வு குறித்து நவீன்'ஸ் நிறுவனத்தின் இயக்குநர் மிஸ். கூஷீர் வசுதா குமார் கூறியதாவது: "மூன்றாவது பதிப்பாக நடைபெறும் இந்த தனித்துவமான லீக் போட்டியோடு இணைந்து செயல்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த லீக் போட்டியானது பிரான்சைஸ் உரிமையாளர்கள் மற்றும் புள்ளிகளுடன் விளையாட்டு வீரர்களை ஏலத்தில் எடுப்பது என்ற கருத்தாக்கத்துடன் இந்தியன் பிரீமியம் லீக் (ஐபிஎல்) போட்டியை மாதிரியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. உயிரோட்டமுள்ள ஒரு விளையாட்டு ஆர்வலர்களது சமூகத்தை இங்கு உருவாக்குவது என்ற நோக்கத்துடன் ஸ்டார்வுட் ஸ்போர்ட்ஸ் கிளப் அர்ப்பணிப்போடு செயல்பட்டு வருகிறது. இந்த விளையாட்டு நிகழ்வின் ஒவ்வொரு பதிப்பும் முந்தைய ஆண்டைவிட இன்னும் பெரிதானதாக மற்றும் சிறப்பானதாக முன்னேற்றம் கண்டு வருகிறது."

ஸ்டார்வுட் பிரீமியர் சீசன் 3ல் மகளிருக்கான த்ரோபால், ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி மற்றும் ஆண்களுக்கான வாலிபால் ஆகிய போட்டிகள் இடம் பெறுகின்றன. பெண்களுக்கான த்ரோபால் மற்றும் ஆண்களுக்கான வாலிபால் போட்டிகளுக்கான வீரர்களை தேர்வு செய்யும் ஏலம் நடைபெற்றதை தொடர்ந்து மேற்குறிப்பிட்ட 3 விளையாட்டு நிகழ்வுகளுக்கான ஜெர்ஸிகள் இன்று அறிமுகம் செய்யப்பட்டன

இந்த லீக் போட்டித் தொடரில் 18 கிரிக்கெட் போட்டிகள், 14 வாலிபால் போட்டிகள் மற்றும் 14 த்ரோபால் போட்டிகள் இடம் பெறுகின்றன. இப்போட்டிகளில் செஸ்ட்நட் சேம்பியன்ஸ், ரெட்வுட் ரினோஸ், ராயல்ஓக் ரேஞ்சர்ஸ் மற்றும் வால்நட் வாரியர்ஸ் என்ற நான்கு அணிகள் போட்டியிடுகின்றன.

இவ்வளாகத்தில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் மத்தியில் ஒருங்கிணைந்து செயல்படுகிற மற்றும் சமூக ஒற்றுமை உணர்வை ஊக்குவிப்பதற்காகவும், அனைத்து குடியிருப்பாளர்களையும் ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடு நடத்தப்படும் ஸ்டார்வுட் பிரீமியர் லீக் போட்டிகளை திரு. ராஜேஷ், நம்பி, லவா, விமல் மற்றும் சித்ரா ஆகிய ஆர்வலர்களை உள்ளடக்கிய மையக்குழு நடத்துகிறது

# சோழவரம் வடக்கு ஒன்றியம் மாதவரத்தில் தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார் மாவட்ட கழக பொறுப்பாளர் எம். எஸ். கே. ரமேஷ்ராஜ்.



சோழவரம் மார்ச்.24–

சோழவரம் வடக்கு ஒன்றியம் மாதவரத்தில் ஒன்றிய செயலாளர் செல்வசேகரன் ஏற்பாட்டில் தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார் மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ். கே. ரமேஷ்ராஜ்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் சோழவரம் வடக்கு ஒன்றியம் மாதவரம் ஊராட்சியில் சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வசேகரன் ஏற்பாட்டில் முதலமைச்சர் மு. க.

ஸ்டாலின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு மாதவரம் பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் தாகத்தை தீர்க்க தண்ணீர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் கலந்துகொண்ட திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் எம் எஸ் கே ரமேஷ்ராஜ் கட்சிக் கொடியை ஏற்றி வைத்து தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார் பின்னர் பொதுமக்களுக்கு தர்பூசணி இளநீர் மோர் உள்ளிட்ட குளிர்ச்சியான பொருட்களை பொதுமக்களுக்கு வழங்கினார் மாதவரம் ஊராட்சியில் பணியாற்றும் தூய்மை காவலர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன இந்நிகழ்ச்சியில்

மாவட்ட அவைத் தலைவர் பகலவன், மாநிலக் கொள்கை பரப்பு துணை செயலாளர் அன்புவாணன், பொன்னேரி நகரக் கழக செயலாளர் வழக்கறிஞர் ரவிக்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கதிரவன், பொன்னேரி நகர இளைஞரணி அமைப்பாளர் மா.தீபன், மற்றும் கட்சி நிர்வாகிகள் சி.ஜெ. ரமேஷ், சுந்தரமூர்த்தி, யுவராஜ், சுரேஷ், கருணாகரன், ராஜேஷ், ஜி என் பாண்டியன் .

# கவிதை தினத்தையொட்டி தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற உலக கவிதை திருவிழா...!



தி.மலை, மார்ச்.24–

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கம் சார்பில் உலக கவிதை தினத்தையொட்டி கவிஞர்கள் பங்கேற்ற கவிதை திருவிழா ஆசியன் இன்சிடிடியூட் வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு சங்க தலைவர் பீ.ரகமத்துல்லா தலைமை தாங்கினார். துணைத்தலைவர் பா.சீனிவாசன் முன்னிலை வகித்தார். செயலாளர் இரா. பாஸ்கரன் வரவேற்றார்.

கவியரங்கத்தின் நடுவராக சாகித்திய அகாதெமி பால புரஸ்கார் விருது பெற்ற கவிஞர் மு.முருகேஷ் பங்கேற்று, கவிதைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை பற்றியும், கவிதைகளின் தன்மைகள் குறித்தும் விளக்கினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற 30க்கும் மேற்பட்ட கவிஞர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கவிஞர்கள் பூங்குயில் சிவக்குமார், மா.கதிரொளி, உ.பிரபாகரன், வை.தங்கராசு, முனைவர் ம.மகாலட்சுமி, சா.ரஷீனா, ஜா.தமீம், இர.பிரபாகரன், த.கௌசல்யா, செல்வி சஹானா உள்ளிட்ட கவிஞர்கள் பங்கேற்று கவிதைகளை வாசித்தனர். மேலும் கலைச் சுடர்மணி பெ.பார்த்திபன், தென்னாங்கூர் ரஜினி ஆகியோரின் தமிழிசை பாடல்கள் பாடப்பட்டது. நிகழ்வை சங்க உறுப்பினர் கு.சதானந்தன் தொகுத்து வழங்கினார். இறுதியில் சங்க பொருளாளர் சீ.கேசவராஜ் நன்றி கூறினார்

# வி.சி.க.தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி ஆணைக்கிணங்க ரமலான் மாத மத நல்லிணக்கத்தோடு 1000 குடும்பங்களுக்கு பிரியாணி மற்றும் அரிசி வழங்கல்



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி அவர்களின் ஆணைக்கிணங்க ரமலான் மாத மத நல்லிணக்கத்தோடு 1000 குடும்பங்களுக்கு பிரியாணி அரிசி மற்றும் கோதுமை சர்க்கரை சேமியா ஆகியவற்றை வழங்கியதோடு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தேர்தல் அங்கீகார வெற்றி விழாவாகவும் கொண்டாடப்பட்டது நடைபெற்றது

தலைமை ஏ.ஜாபர் அலி மண்டல துணை செயலாளர் ஈரோடு திருப்பூர் வரவேற்பு மதிவாணன் மொடக்குறிச்சி சட்டமன்ற செயலாளர் சிறப்புரை சிறுத்தை வள்ளுவன் ஈரோடு திருப்பூர் மண்டல செயலாளர் குமரகுருபாலன் தந்தை பெரியார் திராவிடர் கழகம் மாவட்ட செயலாளர் ஜபருல்லா மாவட்ட

அமைப்பாளர் தந்தை பெரியார் திராவிடர் கழகம் சண்முகம் அமைப்பு செயலாளர் திராவிடர் கழகம் பாத்திமா இளைஞர் அணி நகர துணை செயலாளர் ஜூபைர் அகமது காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் முன்னிலை முருகானந்தம் திருப்பூர் நாடாளுமன்ற தொகுதி

செயலாளர் அரசாங்கம் மாநகர மாவட்ட பொருளாளர் விடுதலைச் சிறுத்தை கட்சி பொறுப்பாளர்கள்

சண்முகம் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி செயலாளர் சரண் ஈரோடு ஒன்றிய. செயலாளர் கென்னடி மாவட்ட பொறுப்பாளர்

கொளத்தூர் பழனி சேலம் மாவட்ட நிர்வாகி பவானி கண்ணன் மாவட்ட பொறுப்பாளர்கள் ஆட்டோ

மூர்த்தி ராமு ஆதி வள்ளுவன் சதீஷ் வளவன துணை அமைப்பாளர் மற்றும் ராகுல் கிருமா முபாரக் சையத் முஸ்தபா ரகுமான் ஜின்னா சையது இப்ராஹிம் கலந்து கொண்டனர் நன்றியுரை ஜாபர் சாதிக்.

# பல்லாவரத்தில் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழக சார்பில் இப்தார் நேன்பு திறக்கும் நிகழ்ச்சி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி பங்கேற்பு



பல்லாவரம் மார்ச்.24–

சென்னை அடுத்த பல்லாவரம் தனியார் மண்டபத்தில் தமுமுக பல்லாவரம் வடக்கு பகுதி சார்பில் இப்தர் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி பகுதி தலைவர் அப்துல் ஷரிப் தலைமையில் மமக பகுதி செயலாளர் முகமது இக்பால், பொருளாளர் நவித்பாஷா முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக நிர்வாக குழு உறுப்பினர் அனிபா, சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மண்டல குழுத் தலைவர் ஜோசப் அண்ணாதுரை, மாவட்ட தலைவர் ஜாஹிர் உசேன் உட்பட தமுமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு இறைவனை பிரார்தனை செய்து நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏராளமான தமுமுக நிர்வாகிகள் மற்றும் இஸ்லாமிய சகோதர, சகோதிரிகள் கலந்து கொண்டனர். நோன்பு திறக்கும் நிகழ்ச்சியின் போது இஸ்ரேல் பாலஸ்தீனிய போரில் கொல்லபட்ட பாலஸ்தீனியர்களுக்காக இறைவனை பிரார்தனையில் ஈடுபட்டது குறிப்பிடதக்கது

# செங்குன்றம் கிறிஸ்டியா எழுப்புதல் சபையின் 10ம் ஆண்டு அற்புத பெருவிழா



செங்குன்றம் மார்ச்.24–

திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் தீர்த்தக் கரையான் பட்டு கிறிஸ்டியா எழுப்புதல் சபை சார்பில் 10 ஆம் ஆண்டு அற்புத பெருவிழா கருணாநிதி தெரு விளையாட்டு மைதானத்தில் கிறிஸ்டியா எழுப்புதல் சபை போதகர் பாஸ்டர் ஸ்டீபன் தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக ஜாக் மிஸ் மினிஸ்டரீஸ் ஸ்டான்லி ஆண்டு அற்புதப் பெருவிழாவில் கலந்து கொண்டவர்களுக்கு தேவ செய்தி அளித்து விபத்தில் துண்டான கைகள் மீண்டும் செயல்படுவது குறித்து தன்னுடைய அனுபவ சாட்சியை ஆச்சரியமூட்டும் விதத்தில் எடுத்துரைத்தார் சிறப்பு சாட்சியாக திரைப்பட நடிகர் இயக்குனர் ரமேஷ் கண்ணா தன்னுடைய வாழ்வில் இயேசுவை ஏற்றுக்கொண்டது குறித்தும் தற்கொலைக்கு முயன்ற தன்னை இயேசு காப்பாற்றி அனைவருக்கும் சாட்சியாக ஏற்படுத்தினார் என்பதையும் எடுத்துரைத்தார் கூட்டத்தில் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான பொதுமக்கள் விசுவாசிகள் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர் முன்னதாக சிறப்பு நடன நிகழ்ச்சி நலத்திட்ட உதவிகள் சிறப்பு பாடல்கள் சிறப்பு ஆராதனை நடைபெற்றது இறுதியில் கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டு பாவ சாபக்கட்டுகளுக்காகவும் வியாதிஸ்தர்களுக்காகவும் சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்பட்டன

# கந்தர்வகோட்டை அருகே சர்வதேச வானிலை தினத்தை முன்னிட்டு அறிவியல் நாட்காட்டி வெளியீடு



கந்தர்வகோட்டை, மார்ச் 24.:

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சர்வதேச வானிலை தினத்தை முன்னிட்டு அறிவியல் நாட்காட்டி வெளியிடப்பட்டது நாட்காட்டியினை தலைமையாசிரியர் தமிழ்ச்செல்வி வெளியிட்டார். கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை ஒன்றிய செயலாளரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா பேசும் பொழுது, உலக வானிலை ஆய்வு அமைப்பு 1950 ஆம் ஆண்டு மார்ச் 23 அன்று நிறுவப்பட்டதால், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 23 அன்று உலக வானிலை ஆய்வு தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் நமது அன்றாட வாழ்வில் வானிலை, காலநிலை மற்றும் நீரின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. மக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதிலும் அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதிலும் தேசிய வானிலை மற்றும் நீரியல் சேவைகளின் பணியை இது எடுத்துக்காட்டுகிறது. 2025 ஆம் ஆண்டு உலக வானிலை தினத்திற்கான கருப்பொருள் முன்கூட்டிய எச்சரிக்கை இடைவெளியை ஒன்றாகமூடுதல் என்பதாகும். உலக வானிலையியல் அமைப்பின் தலைமையகம் ஜெனிவாவில் இயங்கி வருகிறது. இந்திய வானிலைத் துறையின் தலைமை அலுவலகம் டெல்லியில் உள்ளது; சென்னை, மும்பை, கல்கத்தா, நாக்பூர், குவஹாத்தி, டெல்லி போன்றவற்றில் பிராந்திய சேவை அமைப்புகள் இயங்கிவருகின்றன என்று பேசினார். இந்நிகழ்வில் வானவில் மன்ற கருத்தாளர் தெய்வீக செல்வி கலந்து கொண்டார். நிறைவாக ஆங்கில ஆசிரியர் நித்தியா நன்றி கூறினார்.

# நீரிழிவு பாதம் வெட்டி அகற்றப்படுவதை தடுக்கும் உத்திகளை வலியுறுத்திய 39வது' புரொஃபசர் எம்.விஸ்வநாதன் சிறப்பு பேருரை




சென்னை, மார்ச் 24, 2025: சென்னை, ராயபுரத்திலுள்ள எம்.வி டயாபடீஸ் மற்றும் புரொபசர் எம். விஸ்வநாதன் நீரிழிவு ஆராய்ச்சி மையத்தால் ஏற்பாடுசெய்து நடத்தப்பட்ட 39வது, புரொபசர் எம். விஸ்வநாதன் தங்கப்பதக்க சிறப்பு பேருரையை இங்கிலாந்தின் NHS பவுண்டேஷன் டிரஸ்ட், டெர்பி மற்றும் பர்டன் பல்கலைக்கழக மருத்துவமனையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மருத்துவ இயக்குநர் புரொபசர் டாக்டர். பிரான்சிஸ் கேம் வழங்கினார். உலகெங்கிலும், நிகழாமல் தடுக்கக்கூடிய உறுப்பு அகற்றலை தவிர்ப்பது மீதும், மற்றும் அதற்கான சமீபத்திய மருத்துவ சான்றுகள் குறித்தும் பயனுள்ள தகவல்களுடன் அவரது உரை அமைந்திருந்தது.

தமிழ்நாடு டாக்டர். எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர். கே. நாராயணசாமி, இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். சென்னை ராயபுரத்திலுள்ள எம்.வி. டயாபடீஸ் மருத்துவமனை – புரொபசர் எம். விஸ்வநாதன், நீரிழிவு ஆராய்ச்சி மையத்தின் தலைவரும், தலைமை மருத்துவருமான டாக்டர். விஜய் விஸ்வநாதன், மற்றும் அதன் டீன் டாக்டர். நரசிங்கன் மற்றும் இணை டீன் டாக்டர். ஜெயஸ்ரீ கோபால் ஆகியோர் இந்நிகழ்வில் முன்னிலை வகித்தனர்.

நீரிழிவு சிகிச்சை பராமரிப்பில் மீது நீரிழிவு ஆய்விற்கான ஆராய்ச்சி சங்கத்தால் (ஸ்ஷிஷிஜிமி) தயாரிக்கப்பட்ட ஒரு வெள்ளை அறிக்கை இந்நிகழ்வில் வெளியிடப்பட்டது; இந்தியாவில் நீரிழிவிற்கான பராமரிப்பில் நிலைமாற்றத்தை கொண்டு வருவதற்கான நடவடிக்கை திட்டங்களை இது வலியுறுத்தியிருக்கிறது. ஸிஷிஷிஜிமி என்பது, 23 கிளைகளுடன், 12,000 உறுப்பினர்களை உள்ளடக்கி நீரிழிவு சிகிச்சை பராமரிப்பு மீது தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற உலகின் மிகப்பெரிய அமைப்பாகும். இந்த அமைப்பின் தேசிய தலைவராக தற்போது டாக்டர். விஜய் விஸ்வநாதன் செயல்படுகிறார். 2025 மார்ச் 20 முதல் 22ம் தேதி வரை வட சென்னை, தென்சென்னை மற்றும் பெங்களூரு ஆகிய பகுதிகளில் பாத மருத்துவத்தின் இரண்டாவது பள்ளி என்ற நிகழ்வையும் எம்.வி. டயாபடீஸ் நடத்தியிருக்கிறது.

நீரிழிவு பாதம் மீதான சர்வதேச செயற்குழுவின் நடப்பு தலைவராகவும் பணியாற்றும் புரொபசர் டாக்டர். பிரான்சிஸ் கேம், நீரிழிவின் காரணமாக காலின் கீழ்ப்புற பகுதிகளை வெட்டி அகற்றுவதை தடுப்பது மீது அவரது உலகளாவிய நிபுணத்துவ கருத்துகளை பகிர்ந்து கொண்டார். நீரிழிவு தொடர்பான பாத சிக்கல்கள் என்ற பெரும் சுமையை குறைவான மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகள் சுமக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்; பாத பராமரிப்பு நடைமுறைகள் குறித்த குறைவான விழிப்புணர்வு மற்றும் பாத புண்களை சரிவர மேலாண்மை செய்ய தவறுவது ஆகியவையே பாதத்தை வெட்டியெடுக்கும் அவசியம் உருவாக பெரும்பாலும் காரணமாக இருக்கிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் நீரிழிவு சிகிச்சையில் உலகளாவிய சிறந்த நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வை உயர்த்துவதில் இந்த சிறப்பு பேருரை நிகழ்வும் மற்றும் வெள்ளை அறிக்கை வெளியீடும் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் நிகழ்வாக அமைந்திருக்கின்றன என்று தனது உரையில் டாக்டர். விஜய் விஸ்வநாதன் குறிப்பிட்டார். அதிக விழிப்புணர்வும், முறையான பயிற்சியும் இணைந்து செயல்படும்போது அவசியமற்ற உறுப்பு அகற்றல்களை பெருமளவு தடுக்க அது உதவும் என்றும் அவர் வலியுறுத்தினார்."

# கருத்தரித்தலில் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு நடைப்பயணத்தை திருச்சி Nova IVF கருத்தரித்தல் மையம் நடத்தியது




திருச்சி :மார்ச்.24–

கருத்தரித்தலில் ஏற்படும் பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கருத்தரித்தலில் தாமதம் ஏற்பட்டால் மற்றும் பெண்கள் இருவரும் சரியான நேரத்தில் மருத்துவ உதவியை நாட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் Nova IVF கருத்தரித்தல் மையம் விழிப்புணர்வு நடைப்பயணத்தை நடத்தியது. திருச்சி Nova IVF கருத்தரித்தல் மையத்தில் இருந்து இந்த நடைபயணம் தொடங்கியது. இந்த நடைபயணத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டு, கருத்தரித்தல் தாமதமாவதற்கான காரணங்கள் குறித்த விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்திச் சென்றனர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக திருச்சி மருத்துவம் மற்றும் சுகாதார சேவைகள் துறையில் ஓய்வு பெற்ற இணை இயக்குனர் டாக்டர் மோகனசுந்தரம், தஞ்சாவூர் பிரிஸ்ட் பல்கலைக்கழக பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பள்ளியின் முதல்வர் பேராசிரியர் எஸ் லில்லிபேட்டை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி குறித்து, திருச்சி Nova IVF கருத்தரித்தல் மையத்தின் நிறுவன தலைவரும் நிபுணருமான மருத்துவர் பிரியதர்ஷினி மோகனசுந்தரம் கூறுகையில், கருத்தரிக்காமல் போவதற்கு 50 முதல் 60% ஆண்களிடையே பாதிப்புகள் இருப்பது அதிகரித்து இருப்பதாக தெரிவித்தார். கருத்தரிக்காமல் போவதற்கு பெண்களே அதிக அளவில் காரணம் என பல ஆண்கள் கருதுவதாக குறிப்பிட்ட அவர், உண்மையில் இன்றைய காலகட்டங்களில் கருத்தரிக்காமல் போவதற்கு ஆண்கள் அதிக அளவில் காரணமாக இருப்பதை பார்க்க முடிவதாக குறிப்பிட்டார். கருத்தரிக்காமல் போவதற்கு ஆண்கள் அதிக அளவில் காரணமாக இருப்பதற்கு, ஏற்பட்டுள்ள புகைபிடிக்கும் பழக்கம், மது அருந்துதல் மற்றும் விந்து அணுக்கள் முழுமை பெறாதது உள்ளிட்டவை முக்கிய பாதிப்புகளாக இருப்பதாக அவர் விளக்கம் அளித்தார். தொடர்ந்து பேசிய அவர், கருத்தரிக்காமல் இருப்பதற்கு பெண்களின் பாதிப்புகள் என்ன என்ன என்பது குறித்தும் விளக்கம் அளித்தார். குறிப்பாக, சில பெண்களுக்கு பாலிசிஸ்டிக் ஓவரி சென்றோம் எண்டோமெட்ரியோசிஸ் (இடுப்பு பகுதியில் கருப்பைக்கு வெளியே கருப்பையின் புறணித்த ஒத்த திசுக்கள் வளர்வது, விடாய் காலங்களில் அதிக அளவிலான வலி ஏற்படுவது, சில நேரங்களில் மலட்டுத்தன்மையை ஏற்படுவது) ஆகிய காரணங்களை குறிப்பிடுகின்றனர். கருத்தரிக்காமல் இருக்கும் தம்பதிகளில் சிகிச்சைக்காக வரும் பெண்களில் 10 முதல் 12 விழுக்காடு பெண்கள் மட்டுமே இதுபோன்ற பிரச்சனைகளால் பாதித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். 38 வயதிற்கும் அதிகமான சில பெண்கள் மட்டுமே மாதவிடாய் நிறுத்தம் மற்றும் கருமுட்டைகளின் எண்ணிக்கை குறைவு போன்ற ஏற்படுகின்றன. திருச்சியை பொறுத்தவரை பொதுவாகவே 24 முதல் 25 வயதுக்குள் திருமணம் செய்து கொள்வதாகவும், அவர்களுக்கு ஏற்படும் கருத்தரிக்காமல் இருக்கும் பாதிப்புகளை உடனுக்குடன் சரி செய்து கொள்ளாமல், தாமதப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய மருத்துவர் பிரியதர்ஷினி மோகன் சுந்தரம், கருத்தரிக்காமல் இருப்பதற்கு ஆரோக்கியமற்ற வாழ்வியல் முறையும் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் தெரிவித்தார். ஆரோக்கியமற்ற உணவு பழக்க வழக்கங்கள், மன அழுத்தம், உடற்பயிற்சியின்மை மற்றும் போதை பொருள் பயன்பாடு ஆகியவையும் கருவுறாமல் இருப்பதற்கான அதிக காரணங்களாக கண்டறியப் பட்டுள்ளது என்றார்.

மாலை யுகம் இதழின் மதுரை அலுவலக முகவரி:
முதன்மை ஆசிரியர்
திரு. டாக்டர் A.முகமது ரஃபி
57/B–2, சையது இஸ்மாயில்புரம், மருதி காம்ப்ளக்ஸ் மாடி, முனிச் சாலை ரோடு, மதுரை 9.
M.99423 05006

**பெயர் மாற்றம்**

PARAKKATHDHULLAH, Son of ABDUL RASHID, பிறந்த தேதி: 12051961 (பிறந்த ஊர்: இராமநாதபுரம்) No.3/905, MAIN ROAD, VELLAYAPURAM VILLAGE AND POST, THIRUVDANAI TALUK, RAMANATHAPURAM DISTRICT-623315, TAMILNADU என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி BARAKATHULLA என்று அழைக்கப்படுகிறேன்.
PARAKKATHDHULLAH (Old Name) RAMANATHAPURAM
24 MARCH 2025



திருச்சிராப்பள்ளி அனைத்து வணிகர்கள் நல சங்கத்தின் சார்பில் இப்தார் நோன்பு நிகழ்ச்சி சங்கத்தின் பொருளாளர் அன்சார் முகமது இல்லத்தில் நடைபெற்றது. இதில் சங்கத்தின் தலைவர் ராஜன் பிரேம்குமார், செயலாளர் சிவசக்தி கணேசன், மாவட்ட செயலாளர் பால கங்காதரன், அமைப்புச் செயலாளர் கோயில் பிச்சை, செய்தி தொடர்பாளர் அய்யனார், மாநகரச் செயலாளர் செல்வின் ஜான்சன், துணைத் தலைவர்கள் ஸ்ரீரங்கம் பொன் தமிழரசன், பாரதிராஜா, இரும்பு வியாபாரிகள் சங்கத் தலைவர் விக்னேஷ் ரவி முத்துராஜா, ஒருங்கிணைப்பாளர் சரவணன், ஜங்ஷன் பகுதி செயலாளர் மிலிட்டரி கிருஷ்ணமூர்த்தி, சிந்தாமணி அனைத்து வியாபாரிகள் சங்க தலைவர் ராஜ்குமார், செயலாளர் கணேசன், வயலூர் அனைத்து வியாபாரிகள் நல சங்க செயலாளர் கமலக்கண்ணன், பொருளாளர் சதீஷ், ஸ்ரீரங்கம் பகுதி அமைப்புச் செயலாளர் ராதாகிருஷ்ணன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




ஜாக்டோ ஜியோ தர்மபுரி மாவட்ட கிளை சார்பாக தமிழ் நாடு முதல்வரின் தேர்தல் கால வாகுறுதியான பழைய ஓய் ஊதியத்தை வழங்குதல் உள்ளிட்ட வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற உண்ணாவிரத போராட்டத்திற்கு ஒருங்கினை இப்பாளர்கள் கௌரன், சாமிநாதன், சுருளிநா தன், பாஸ்கரன், பெஞ்சமின் ஆகியோர் தலைமை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்கள் காமராஜ், ரக்ஷித், அண்ணா குபேரன், மற்றும், ஏராளமான ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர். முடிவில் பொருளாளர் புகழேந்தி நன்றி கூறினார்.



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் அருகே மோவூர் கிராமத்தில் செயல்படும் அரசு உயர்நிலைப் பள்ளியில் 15 ஆம் ஆண்டு விழா சனிக்கிழமை நடந்தது. விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயந்தி தலைமை தாங்கினார். ஆசிரியர்கள் க.இந்திரா காந்தி, ஜெ.ஜெயந்தி, ஆ.வேல்முருகன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக பள்ளி மேலாண்மை குழு தலைவர் சௌமியா வேல்முருகன், கல்விக் குழு தலைவர் வேல்முருகன் ஆகியோர் கலந்துகொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினர். முன்னதாக அனைவரையும் ஆசிரியர் மூ.சங்கீதா வரவேற்றார். உடற்கல்வி ஆசிரியர் து.ரவி நன்றி கூறினார்.




ஈரோடு எஸ்டிபிஐ. தெற்கு மாவட்டம் சார்பாக சமூக நல்லிணக்க. இஃப்தார் நிகழ்ச்சி விவீஉ மஹாலில் நடைபெற்றது தலைமை அப்துல்ரகுமான் மாவட்டதலைவர் வரவேற்புரை முனாப் மாவட்டசெயலாளர் முன்னிலை குறிஞ்சி பாஷா மாவட்டதுணைதலைவர், முகமது ஜாபிர் மாவட்டபொருளாளர் தொகுப்புரை சாகுல்ஹமீதுமாவட்ட பொதுசெயலாளர் சிறப்பு விருந்தினர்கள் உலமாக்கள் ஜாமத் நிர்வாகிகள் மற்றும் சமுதாய அமைப்புகளின் பொறுப்பாளர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் கோவை முஸ்தபா தமிழ் மாநில பொருளாளர் எஸ் டி பிஐ கட்சி முகமது லுக்மானுல் ஹக்கீம் கோவை மண்டலசெயலாளர் எஸ் டிபிஐ கட்சி முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் தென்னரசு ஹசன்பாபு மாநில பொருளாளர் எஸ்டியூ

முருகாசேகர் பகுதி கழக அதிமுக செயலாளர் ஜாபர் சாதிக் மண்டல தலைவர் காங்கிரஸ், மண்டல செயலாளர் விடுதலை சிறுத்தை கள் கட்சி ஜாபர் அலி, காஜாமைதீன் அதிமுக, சிறப்பு பிரார்த்தனை முஹம்மது ஹஃபீழ் தாவூதி மண்டல செயலாளர் ஜாமத்துல் உலமா எஸ்டிபிஐ கட்சி நிர்வாகிகள் தளபதி பஷீர் முஹமது ஹசன் அலி முகமது மன்சூர் தஸ்தகீர் பகுருதீன் உமர் பாரூக் முஹமது ஸ்ஃப்வான் மற்றும் நிர்வாகிகள் ஜாமத்தர்கள் திரளாக கலந்து கொண்டனர் நன்றியுரை கேபிள் சபீர் அஹமது.



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த அரியப்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா தலைமை ஆசிரியர் சங்கரி தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஆரணி வட்டாட்சியர் கௌரி, வனச் சரகர் இரவிக் குமார், வட்டாரக் கல்வி அலுவலர் கமலக் கண்ணன், மாசுக்

கட்டுப்பாடு பொறியாளர், வாழும் கலை அமைப்பு நாகநதி புனரமைப்பு திட்டகள் அறக்கட்டளை அகிலி னாள்நிதிகள் –போது 2குனர் சந்திர சேகாள், மககள, தானமாக பஞ்சம்மாள், கோபு – பள்ளி வளர்ச்சிக்காக 1 லட்சம் வைப்பு நிதிவழங்கிய பாஸ்கரனை வட்டாட்சியர் கௌரி கௌரவித்தார்.



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகம் அருகே மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் “போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” என்னும் விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் கொடியசைத்து துவக்கிவைத்து வில்லையினை ஆட்டோக்களில் ஒட்டினார்கள். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், வட்டார போக்குவரத்து அலுவலர் ஜெய்சங்கர் மற்றும் பலர் உடன் உள்ளனர்.



காஞ்சிபுரத்தில், திருவெஃகா, பெரிய பெருமாள் என அழைக்கப்படும், ஸ்ரீ கோமளவல்லி நாயகா சமேத ஸ்ரீ யதோத்தகாரி பெருமாள் திருக்கோவிலில் பங்குனி மாத பிரம்மோற்சவம் நடைபெற்று வருகிறது பிரம்மோற்சவம் தொடங்கியதைத் தொடர்ந்து மூன்றாம் நாள் உற்சவத்தில் ஸ்ரீ யதோத்தகாரி பெருமாள் பச்சை நிற ஆடையில் கருட வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளித்தவாறு காஞ்சிபுரம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக மேளதாளம் முழங்க திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். திருவிழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு கோவிந்தா, கோவிந்தா, கோஷமிட்டு பெருமாளை தரிசனம் செய்து வணங்கி வழிபட்டு சென்றனர்.




திருவள்ளூர் – பெருமாள்பட்டு – ஸ்ரீராம் கலை(ம) அறிவியல் கல்லூரி கலை விழா 22.3.25 சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றது. விழாவில் ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை அறங்காவலர்கள் முனைவர் கோவிந்தரராஜலு, கஸ்தூரி பார்த்தசாரதி அவர்களும், தலைமையுரையாற்ற, சிறப்பு விருந்தராக சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் தலைவரும் (Syndicate Memeries) முனைவர் எஸ்.எஸ், சுந்தரம் அவர்கள் சிறப்புரையாற்றி கலை(ம) விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற சுமார் 350 மாணவ. மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார். இறுதியாக கல்லூரி முதல்வர் முனைவர் டி.சரவணன் அவர்கள் நன்றியுரையாற்ற நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது.



மேல்நெமிலி .N.K இராமலிங்கம் தலைமையாசிரியர் நினைவுதினம் முன்னிட்டு அவரது பிள்ளைகள் இரா. வெங்கிடேசன் – இரா.கன்னியப்பன் குடும்பத்தினர் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் பிற்பகல் 1. 00 மணிக்கு பள்ளி வளாகத்தில் மேல்நெமிலி பள்ளி மாணவச்செல்வங்கள் (102) அனைவருக்கும் வாட்டர் பாட்டில் எழுதுபொருட்கள் வழங்கினர். இந்நிகழ்வில் முன்னாள் தலைவர், முன்னாள் – இன்னாள் பள்ளி SMC தலைவர்கள், பெற்றோர்கள், ITK தன்னார்வலர்கள், தலைமையாசிரியர் கலந்துகொண்டுனர். இன்றைய நிகழ்வில் N.K இராமலிங்கம் தலைமையாசிரியர் குடும்பத்தினர்கள் நம் பள்ளியில் நடைபெறவுள்ள ஆண்டுவிழா நிகழ்ச்சிக்கான விழா மேடை சிமெண்ட் காங்கிரட்டில் கட்டுவதற்கு ரூபாய் 5000 – மாணவச்செல்வங்களுக்கான பரிசுப்பொருளாக புத்தகம் கொடுக்க ரூபாய் 10000 வழங்கி உள்ளனர். பள்ளி சார்பாக மிகுந்த நன்றியினை மேல்நெமிலி பள்ளி சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம்.

PARAMBARIYAM PARTY HALL A/C
Your Events are our Responsibility
SPECIAL OFFER
Going on Hall Booking
– BIRTHDAYS
– ENGAGEMENTS
– PUBERTY
– FAMILY FUNCTIONS &
– CORPORATE EVENTS

– Spacious Party Hall,
– Fully Air-Conditioned Dining Area
– High Capacity Parking Space
For Booking Contact
9841593632 / 8056927849
No.1, Sathyamoorthy Street, Srinivasa Nagar, Perungalathur

# தேனியில் 3வது புத்தக திருவிழா: அமைச்சர் பெரியசாமி மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்

தேனி,மார்ச்.24

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட மேனகா மில் மைதானத்தில் மாவட்ட நிர்வாகம், மற்றும் பொது நூலக இயக்ககம் இணைந்து நடத்தும் 3ஆவது புத்தகத் திருவிழாவினை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் மற்றும் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் முன்னிலையில் தொடங்கி வைத்து, புத்தகத்திருவிழாவில் அமைக்கப்பட்டுள்ள புத்தக அரங்குகளை பார்வையிட்டனர்;. புத்தகம் வாசிப்பை மக்கள் இயக்கமாக எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகவும், அந்த காலம் முதல் இந்த காலம் வரை உள்ள பல்வேறு வகையான நூல்களை ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து, பொதுமக்களுக்கு எளிதில் கிடைப்பதற்காகவும் மாவட்டந்தோறும் புத்தகத் திருவிழா நடத்தப்படுகிறது.



அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் 3ஆவது புத்தகத் திருவிழா (23.03.2025) முதல் 30.03.2025 வரை 8 நாட்கள் நடைபெறவுள்ளது. இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் மகாலட்சுமி, திட்ட இயக்குநர்கள் அபிதா ஹனீப் (ஊரக வளர்ச்சி முகமை), சந்திரா (மகளிர் திட்டம்), உதவி காவல் கண்காணிப்பாளர் கேல்கர் சுப்ரமணிய பாலசந்ரா முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லெட்சுமணன், பழனிசெட்டிபட்டி பேரூராட்சித் தலைவர் மிதுன்சக்கரவர்த்தி, நகர்மன்றத்தலைவர்கள் ரேணுபிரியா பாலமுருகன் (தேனி அல்லிநகரம்), சுமிதா சிவக்குமார் (பெரியகுளம்), ராஜராஜேஸ்வரி சங்கர் (போடிநாயக்கனூர்), அய்யம்மாள் ராமு (சின்னமனூர்), பழனிசெட்டிபட்டி பேரூராட்சி துணைத்தலைவர் மணிமாறன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) கலைச்செல்வி, துணை இயக்குநர் (தோட்டக்கலை) நிர்மலா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நல்லதம்பி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துமாதவன், மாவட்ட நூலக அலுவலர் சரவணக்குமார், தாட்கோ மேலாளர் சரளா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ராஜராஜேஸ்வரி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வி சந்தியா, உதவி இயக்குநர் (தமிழ்வளர்ச்சித்துறை) இளங்கோ, துணை ஆட்சியர் (பயிற்சி) அரவிந்த், அனைத்து பேரூராட்சித் தலைவர்கள், நகராட்சி ஆணையாளர்கள், செயல் அலுவலர்கள், அனைத்துத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

# குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட ஊராட்சிகளில் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடம் - ஆய்வு கட்டடம் : அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கிவைத்தார்

காஞ்சிபுரம் மார்ச்.24–

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், பள்ளிக் கல்வித் துறை மூலம் கோவூர் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.21.86 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் மற்றும் ஆய்வக கட்டடம் கட்டும் பணிகளுக்கு மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணியினை துவக்கி வைத்தார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், பள்ளிக் கல்வித் துறை மூலம் கோவூர் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இன்று (22.03.2025) குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.21.86 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் மற்றும் ஆய்வக கட்டடம் கட்டும் பணிகளுக்கு மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில்



நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணியினை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், பள்ளிக் கல்வித் துறை மூலம் கோவூர் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில், குன்றத்தூர் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.2.97 கோடி மதிப்பீட்டில் 10 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகமும், கோவூர் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ3.48 கோடி மதிப்பீட்டில் 12 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகமும், அய்யப்பன்தாங்கல் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.4.11 கோடி மதிப்பீட்டில் 14 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகமும், மாடம்பாக்கம் அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.2.83 கோடி மதிப்பீட்டில் 12 கூடுதல் வகுப்பறைகளும், மாங்காடு அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.1.41கோடி மதிப்பீட்டில் 6 வகுப்பறைகளும். பட்டூர் முஸ்லிம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.71 இலட்சம் மதிப்பீட்டில் 3 வகுப்பறைகளும் கொளப்பாக்கம் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.71இலட்சம் மதிப்பீட்டில் 3 வகுப்பறைகளும் நல்லூர் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் 8 வகுப்பறைகளும். திருப்பெரும்புதூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஜமீன் தண்டலம் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் 8 வகுப்பறைகளும், காட்ரம்பாக்கம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் 8 வகுப்பறைகளும் என மொத்தம் ரூ.21.86 கோடி மதிப்பீட்டில் 5 மேல்நிலைப்பள்ளி மற்றும் 5 உயர்நிலைப்பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை மற்றும் அறிவியல் ஆய்வகம் கட்டும் பணிக்கு மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி. பணியினை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கு.செல்வப்பெருந்தகை, திருப்பெரும்புதூர் ஒன்றியக் குழுத்தலைவர் திரு.எஸ்.டி.கருணாநிதி, மாங்காடு நகரமன்ற தலைவர் திருமதி.சுமதி முருகன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.சிவ சண்முகசுந்தரம், முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. வெ. வெற்றிச்செல்வி, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பிரண்ட்ஸ் இந்தியா பவுண்டேஷன் சார்பில் விருது வழங்கும் விழா

நாகர்கோவில், மார்ச் 24:

சமூக சிந்தனையோடு செயலாற்றக்கூடிய பல்வேறு துறைகளைச் சார்ந்த சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா நாகர்கோவில் எஸ் கே எம் ஹாலில் வைத்து நடைபெற்றது. பிரண்ட்ஸ் இந்தியா பவுண்டேஷன் நிர்வாக இயக்குனர் மு. தர்மராஜன் தலைமையில் மாநிலத் துணைச் செயலாளர் அப்டா மு. கண்ணன், மாநில பொருளாளர் ரவி முருகன், மாநில துணைச்செயலாளர் வி. சசிக்குமார், மாநில மக்கள் தொடர்பு அணி தலைவர் காசி விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் சுத்த சன்மார்க்க அருள் ஒளி தவத்திரு சுவாமி பத்மேந்திரா ஆசியுரை வழங்கினார் விஜய் டிவி புகழ் சஞ்சய் விழாவினை தொகுத்து வழங்கினார் முன்னதாக மாநிலத் துணைத் தலைவர் ஜெயராஜ் வரவேற்புரை ஆற்றினார். விழாவின் துவக்கத்தில் நாஞ்சில் ரேவதி வில்லிசை குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது தொடர்ந்து நாகர்கோவில் கவிதாலயா நாட்டியப்பள்ளி மாணவிகளின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி வண்ணப் பலூன்கள் பறக்க விடப்பட்டது. தொடர்ந்து சாதனையாளர்களுக்கு விருதுகளை சிபிஜ வழக்குகள்



நீதிமன்றம் சென்னை ஓய்வு பெற்ற மாண்புமிகு நீதிபதி எ.திருநீல பிரசாத். கேரள முன்னாள் மாவட்ட கண்காணிப்பாளர் எஸ். ராஜேந்திரன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், இந்து அறநிலையத்துறை அறங்காவலர் குழு தலைவர் பிரபா ஜி ராமகிருஷ்ணன், நாகர்கோவில் மாநகராட்சி கவுன்சிலர் எம். ஸ்ரீலிஜா, கவிதாலயா நாட்டியப் பள்ளி நிறுவனர் பி.நிஷா ரஜின், தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு மாநிலத் துணைத் தலைவர் அல் அமீன் சாகுல் அமீது, பிரண்ட்ஸ் இந்தியா பவுண்டேசன் சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் மில்லர், தோவாளை ஊராட்சி ஒன்றிய முன்னாள் சேர்மன் இ.சாந்தினி பகவதியப்பன், பீமநகரி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் எல்.சஜிதா சுப்பிரமணியன் பிரண்ட்ஸ் இந்தியா பவுண்டேஷன் மாநில பேச்சாளர் எம் எஸ் அமலன் மற்றும் பலர் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினர். விழாவில் போதையில்லாத தமிழகம் என்பதை வலியுறுத்தி அனைவரும் செல்போன் டார்ச் லைட் ஒளிரச் செய்து விழிப்புணர்வு மேற்கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் வில்லிசை குழு தலைவர் அகிலா லட்சுமி என்ற ரேவதிக்கு நவரத்தின கலா ஸ்ரீ விருது . கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அரசு பள்ளி தலைமை ஆசிரியை கமலா அவர்களுக்கு கர்மவீரர் காமராஜர் விருது இந்து அறநிலையத்துறை அறங்காவலர் குழு தலைவர் பிரபா ஜி ராமகிருஷ்ணன் அவர்களுக்கு ஆன்மீகச் செம்மல் வருது நாகர்கோவில் மாமன்ற உறுப்பினர் ஸ்ரீலிஜா அவர்களுக்கு இளம் பெண் ஆளுமை விருது. தோவாளை சக்தி மகளிர் அறக்கட்டளை தலைவர் சாந்தினி பகவதியப்பனுக்கு சிறந்த தொண்டு நிறுவனம் விருது வெள்ளமடம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் சகுந்தலா அவர்களுக்கு சிறந்த சாதனையாளர் விருது சமூக சேவகர் வி. சசிக்குமார் அவர்களுக்கு இளம் பெண் ஆளுமை விருது பீமநகரி ஊராட்சி மன்ற தலைவர் சஜிதா சுப்பிரமணியன் அவர்களுக்கு இளம் சாதனையாளர் விருது சமூக ஆர்வலர் அங்ரி சுஜித் அவர்களுக்கு சிறந்த சமூக சேவகர் விருது சினேகம் பெற்றோர் இல்லம் நிறுவனர் லதா கலைவாணன் அவர்களுக்கு சிறந்த சமூக தாரகை விருது கவிதாலயா நாட்டியப்பள்ளி நிறுவனர் நிஷா ரஜின் அவர்களுக்கு நவரச நாட்டிய ஸ்ரீ விருது மற்றும் சமூக சிந்தனையோடு செயலாற்றக்கூடிய 114 பேருக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை பிரண்ட்ஸ் இந்தியா பவுண்டேசன் செயற்குழு உறுப்பினர் தங்க சுதா அலுவலக பணியாளர்கள் சிந்து நந்தினி ஷோபனா விசாகன் விசால் மற்றும் பிரண்ட்ஸ் இந்தியா பவுண்டேஷன் பொறுப்பாளர்கள் மாவட்ட தலைவர்

ஜிஎஸ் முருகன். மாவட்ட இளைஞரணி செயலாளர் ரமேஷ். சுயம்பு மாநில இலக்கிய அணிதலை வர் சுரேஷ்குமார் மாநில விளையாட்டு அணி செயலாளர் வசுந்தராஜ் ஆகியோர் செய்திருந்தனர்

# எஸ்.ஆர்.எம். வள்ளியம்மை பொறியியல் கல்லூரி 2025 கல்லூரி தினம் நிகழ்வு - பிரம்மாண்ட வெற்றி விழா

காட்டாங்குளத்தூர் மார்ச்.24–

எஸ்.ஆர்.எம்.வள்ளியம்மை பொறியியல் கல்லூரி (தன்னாட்சி நிறுவனம்)

எஸ்.ஆர்.எம். நகர், காட்டாங்குளத்தூர் 603 203.2025 கல்லூரி தினம் நிகழ்வு பிரம்மாண்ட வெற்றி விழா கல்லூரி தினம் என்பது மாணவர்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கும் நிகழ்வுகளில் ஒன்றாகும். எஸ்ஆர்எம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரியில் 2025 கல்லூரி தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வு 2025 மார்ச் 22ஆம் தேதி, சிறப்புமிக்க முனைவர் டி.பி. கணேசன் அரங்கில் நடைபெற்றது. அழகிய கட்டிடக்கலையால் வடிவமைக்கப்பட்ட இவ்வரங்கம், மாணவர்களின் உற்சாகத்தையும் திறமையையும் வெளிப்படுத்த, சிறந்த களமாக அமைந்தது. விழாவின் வண்ணமயமான சூழல், மாணவர்கள் கொண்டுள்ள உறுதிப்பாடு மற்றும் ஆற்றலுக்கு நேரடியாகப் பிரதிபலித்தது.

நிகழ்வின் தொடக்க நிகழ்ச்சி, சிறப்பாக நடைபெற்று, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர். சிறப்பு விருந்தினராக திரு. ஆனந்தகிருஷ்ணன் தேவராஜ். தேசியத் தலைவர். NGA பொறியியல் பணியமர்த்தல், விப்ரோ லிமிடெட், பங்கேற்றார். முனைவர் இரவி பச்சமுத்து, தலைவர், இணைவேந்தர் எஸ்ஆர்எம் கல்வி நிறுவனங்கள், ஆர். ஹரிணி, நிர்வாக அதிகாரி, எஸ்ஆர்எம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரி, அவர்கள் தங்கள் அகம்நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

முனைவர் பி முனைவர்




எஸ். விசாலாட்சி. துணை முதல்வர். எஸ்ஆர்எம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரி, நிகழ்ச்சியை வரவேற்பு உரையுடன் தொடங்கினார். மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் அவரது வார்த்தைகள், நாளின் நிகழ்வுகளுக்கான அடித்தளமாக அமைந்தன. முனைவர் சிதம்பரராஜன், இயக்குநர் அவர்கள் மனதைத் தெளிவுப்படுத்தும் உரையாற்றினார். தொடர்ந்து, முனைவர் எம். முருகன், முதல்வர், எஸ்ஆர்எம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரி, ஆண்டறிக்கையை வழங்கி, மாணவர்களின் கல்விச்சார் சாதனைகள், ஆராய்ச்சி முயற்சிகள், மற்றும் கூடுதல் பாடத்திட்டச் செயல்பாடுகளைப் பாராட்டினார். அதனைத் தொடர்ந்து, முனைவர் கோமளா ஜேம்ஸ், துறைத்தலைவர். மின்னணு மற்றும் தகவல் தொடர்பியல் பொறியியல், எஸ்ஆர்எம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரி, சிறப்பு விருந்தினரை அனைவருக்கும் அறிமுகப்படுத்தினார்.

திரு. ஆனந்தகிருஷ்ணன் தேவராஜ் தன் ஊக்கமளிக்கும் உரையில், மாணவர்கள் ஒளிமிகுந்த எதிர்காலத்திற்காகப் பாடுபட வேண்டிய முக்கியத்துவத்தை விளக்கினார். மேலும் அவர், இம்மாதிரி நிகழ்வுகளில் கலந்துகொள்வது, தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும், தன்னம்பிக்கையை வளர்க்கவும் உதவுகிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்த விழாவில், கல்வி;சசார் மற்றும் சிறப்புப்பாடச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. மேலும், பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய மாணவர்கள் மட்டும் இல்லாமல், கல்வி மற்றும் ஆராய்ச்சி முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றிய பேராசிரியர்களும் பாராட்டப்பட்டனர். முனைவர் டி. இளங்கோ, துறைத்தலைவர், கட்டிடப் பொறியியல் துறை, எஸ்ஆர்எம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரி, அவர்கள் நிகழ்வின் வெற்றிக்குப் பங்களித்த அனைத்துப் பிரமுகர்கள், ஏற்பாட்டாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு நன்றியுரையைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வுகளுக்குப் பிறகு, கல்லூரி தினம் ஒரு வண்ணமயமான விழாவாக மாறியது. மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களைக் கவர்ந்தனர். முக்கிய நிகழ்ச்சிகள்:

மாணவர்கள் வழங்கிய அழகிய பாரம்பரிய நடன நிகழ்ச்சி, எஸ்ஆர்எம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரி இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி, மௌன நாடகம் வழியே கருத்துக்களை வெளிப்படுத்திய சுவாரசியமான நிகழ்வு, சிலம்பம் காட்சி பாரம்பரிய யுத்தக்கலையின் திறமைமிக்க வெளிப்பாடு, நவீனப் பாடல்கள் சிறந்த இசை மற்றும் கவிதை இணைந்த அசத்தலான காட்சி, ஒவ்வொரு துறையிலும் மாணவர்கள் பிரமிப்பூட்டும் நடனங்கள்

தேசிய மாணவர் படை மாணவர்களின் அணிவகுப்பு விழாவின் சிறப்பம்சமாக அமைந்தது. சீரான ஒழுங்குமுறையுடன் நடைபெற்ற அவர்களின் கண்கவர் அணிவகுப்பு நிகழ்ச்சிக்கு மேலும் பிரம்மாண்டத்தைக் கூட்டியது. தேசிய மாணவர் படை மாணவர்களின் ஒற்றுமையையும், அவர்களது அசைக்க முடியாத ஒழுங்குநிலையும் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன.

இந்த கல்லூரி தின விழா, அனைவரின் மனதிலும் நீங்கா நினைவுகளை உருவாக்கியது. மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி, மகிழ்ச்சி மற்றும் ஒற்றுமையைக் கொண்டாடி, இனிய நினைவுகளைப் பெற்றுச் சென்றனர். இந்த பிரமாண்டமான விழா, அவர்களின் சாதனைகளை வியந்து பாராட்டும் ஒரு மிகப்பெரிய தருணமாக அமைந்தது.

2025 கல்லூரி தினம், மாணவர்களின் மாபெரும் வெற்றிக்கதையாகும். எதிர்கால மாணவர்களுக்கும் இது ஒரு மைல்கல் நிகழ்வாக அமைந்து, கல்வியிலும், கலாச்சாரத்திலும் முன்னேற ஊக்கமளிக்கும் நிகழ்வாக மாறும் என்பதில் சந்தேகமில்லை!

# பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம்!

பெருமாள்பட்டு:மார்ச்24–

திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டில் அமைந்துள்ள ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய சேவை திட்டம் சார்பில் மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது.

30 ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரியில்

இலவச மருத்துவ சேவை வழங்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு ஏ.சி.எஸ். மருத்துவ கல்லூரி நடத்திய இம்முகாமில், பொது மருத்துவம், பல் மருத்துவம், தோல் மருத்துவம், இதய




செயல்பாட்டை அறியும் பரிசோதனை, மூட்டு சம்பந்தப்பட்ட பரிசோதனை, என பல்வேறு மருத்துவ சிகிச்சைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதில் மாணவ, மாணவியர்கள், பேராசிரியர்கள் என அனைவரும் கலந்து கொண்டு பரிசோதனை செய்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர். பி.ஆர். ரமேஷ்பாபு அவர்களின் மேற்பார்வையில் சிறப்பாக நடைபெற்றது.

மேலும் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் நாட்டு நலப்பணி அலுவலர் ஜி. ராஜ் விநாயக் மற்றும் முதலாம் ஆண்டு தலைவர் ஏ.ராஜீவ் ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முதலாம் ஆண்டு நாட்டு நலப்பணி தன்னார்வ தொண்டர்களின் உதவியோடு சிறப்பாக செய்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீராம் கல்வி குழுமத்தை சார்ந்த ஸ்ரீராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஸ்ரீராம் வித்யா மந்திர் மாணவ மாணவியரும் ஆசிரிய பெருமக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், காசநோய் பங்களிப்பிற்காக நீலகிரி மாவட்ட சுகாதார அலுவலர் மற்றும் துணை இயக்குனர் சுகாதார பணிகள் மரு.சோமசுந்தரம் அவர்கள் பாலாடா ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் மரு.கோபிநாத் அவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.





தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் N.ஆனந்த் Ex MLA அவர்களின் ஆலோசனைப்படி வருகின்ற வெள்ளிக்கிழமை 21/03/25 அன்று மாலை 5.30மணி அளவில் திருவண்ணாமலை மேற்கு மாவட்ட செயலாளர் அண்ணன் ஜி .கே. கதிரவன் அவர்கள் தலைமையில் அண்ணன் கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் D.ராஜா அவர்களின் வழிகாட்டுதலில் கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி சார்பாக இப்தார் நோன்பு நிகழ்ச்சி ஆவூர் கிளைக் கழகத்தில் நடைபெற்றது . இந்த நிகழ்ச்சியில் மேற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்.. மருத்துவர் விஜய் கரன் மற்றும் நகரச் செயலாளர் சரவணன் என்கிற துரை ஆகியோர் கலந்து கொண்டனர் இதில் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என அனைத்து சமுதாய மக்கள் இந்து முஸ்லிம் கிருத்துவர் மத நல்லினகத்துடன் இஃப்தார் (எ) நோன்பு நிகழ்ச்சி திருவண்ணாமலை மேற்கு மாவட்டம் கீழ்பென்னாத்துர் சட்டமன்றம் ஆவூர் கிளை கழகம் சார்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்...




உலக பிராமணர்கள் நலச் சங்கத்தின் 11ஆம் ஆண்டு விழாவில் நெல்லை ஸ்ரீ சடகோபன் அவர்களுக்கு சாதனையாளர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

## சிந்தனைத்துளி

பெயர்

என்றோ நாம்
செய்து வைத்த
நன்மைகள் யாவற்றிற்கும்
இன்று நமக்கு
கிடைக்கும் பரிசுக்கு
பெயர் அதிரஷ்டம்
என்றோ நாம்
செய்த தவறுகளுக்கு
இன்று நமக்கு
கிடைக்கும் தண்டனைக்கு
பெயர் விதி.



இசைப்பிரியன்
கே.சங்கர்,
பெருங்களத்தூர்..



சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி 37வது வட்ட திமுக சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தேர்வு 72வது பிறந்த நாளை ஒட்டி அறுசுவை விருந்து மற்றும் நல திட்ட உதவி வழங்கும் நிகழ்வு நலத்திட்ட உதவிகளை வழங்கியவர் ஆர்.டி சேகர் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர்....37 வது வட்ட திமுக சார்பாக... ஹாட் பாக்ஸ்... ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை.... தூய்மை பணியாளர்களுக்கு புடவைகள்... மற்றும் சுமார் 30 பேருக்கு கை கடிகாரம் வழங்கப்பட்டு... 500க்கும் மேற்பட்டோருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.... நிகழ்ச்சி ஏற்பாடு எம் சண்முகம் 37 வது வட்ட பொருளாளர்.... மேலும் இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் மாவட்டத் துணைச் செயலாளர் பகுதி அவை தலைவர் பெரம்பூர் வடக்கு வட்ட செயலாளர் பெரம்பூர் தெற்கு வட்ட செயலாளர் பெரம்பூர் மாமன்ற உறுப்பினர்கள்... கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தனர்

Owned and Pubilshed by MOHAMED IBRAHIM N0.6/30, Gulam Murthuza Street, Ellis Road, Chennai - 600 002 & Printed by E.SUDEESHKUMAR. at CHENNAI OFFSET PRINTERS 19/1.21/2.Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai-600 002. Editor MOHAMED IBRAHIM.